International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 03 Issue: 04 October to December 2021 www.irjtsjournal.org

# பெண்ணியப் பார்வையில் நன்மாறன் கோட்டைக் கதை

## The Story of Nanmaran Fort from a Feminist point of View

த.அருணாதேவி[அ],முனைவர்அ.சண்முகசுந்தரம்[ஆ]

*[அ]முனைவர் பட்ட ஆய்வாளர், [ஆ]பேராசிரியர், தமிழ்த்துறை, கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி, திருப்பூர்- 638 105.*

*D.Arunadevi[a] ,A. Shanmugasundaram [b]*

*[a] Research Scholar, [b] Associate Professor, Department of Tamil, Karuppannan Mariappan College, Tiruppur- 638 105.*

**முன்னுரை**

இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வகைகளுள் சிறுகதை தனக்கென ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. சிறுகதைகள் படைப்பாளனின் உணர்வையும், அனுபவத்தையும், சமூகச் சூழலையும் பிரதிபலிப்பவை. தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர் இமையம். “செல்லாத பணம்” என்ற புதினத்திற்கு 2020 - ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதெமி விருது பெற்றவர். பெண்களின் சமூகப் பிரச்சனைகளை, அவர்களின் வெவ்வேறு மன இயல்புகளை முன்னிறுத்தி எழுதுவதில் இமையம் தனித்துவமிக்கவர். “நன்மாறன் கோட்டைக் கதை” என்னும் அவரது தொகுப்பில் உள்ள கதைகள் பெரும்பான்மை பெண்களை மையப்படுத்தி எழுதியவை. பெண்ணியப் பார்வை குறித்து இக்கட்டுரை எடுத்தியம்புகின்றது.

**பெண்ணியம்**

உலகம் தோன்றிய காலத்திலிருந்து இன்று வரை உயிரினங்கள் நிலைக்களனாக அமைவதற்குக் காரணம் பெண்மை. ஆணை விடப் பெண் உலகியல் அறிவு படைத்தவள். அன்பு தழைக்க, அறம் நிலைக்க, அருள் துளிர்க்கக் காரணமாக இருப்பது பெண்மையே.

‘பெண்ணியம்’ என்ற சொல் ‘Feminism’ என்ற சொல்லிலிருந்து தோன்றியது. ‘Feminism’ என்னும் ஆங்கிலச் சொல் “பெமினா” என்ற இலத்தீன் மொழியிலிருந்து பிறந்தது. ‘Feminism’ என்ற சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லாகப் “பெண்நிலை வாதம்” என்ற சொல்லை இன்று பயன்படுத்தி வருகின்றனர்.

பெண் சக உயிரி, ஆணுக்கு நிகரானவள். எந்நிலையிலும் அடக்கி வைக்கப்படக் கூடியவள் அல்ல. பெண்கள் குடும்பத்திலும், அலுவலகங்களிலும், சமூகப் பிரச்சனைகளிலும் ஆளாகி ஒடுக்கி வைக்கப்படுகிறாள். பெண்கள் ஒடுக்கப்படுவதையும், சார்பு நிலைக்கு ஆளாவதையும் பாலின அடிப்படையில் துன்புறுத்தப்படுதலையும் பெண்ணியத் திறனாய்வாளர்கள் எதிர்க்கின்றனர். "பெண்ணியம் ஆணுக்கு மறுதலையானது அன்று, தனிப்பட்;ட ஓர் ஆணை அல்லது ஆண் சமூகத்தை எதிர்ப்பதோ, வெறுப்புணர்வு கொள்வதோ, கசப்புணர்வை உமிழ்வதோ, பெண்ணியத்தின் நோக்கமல்ல. சமூகக் கட்டமைப்பில் அனைத்துத் தளங்களிலும் ஆண் தான் முதன்மைப்படுத்தப்படுகிறான். சமூகத்தில் மட்டுமல்ல, நம் பண்பாட்டில் மட்டுமல்ல, இலக்கியங்களிலும் ஆண் தான், ஆணின் அதிகார மனப்பான்மை தான் மையப்படுத்தப்பட்டுள்ளது. சமூகத்தில் பெண் பின் தள்ளப்பட்டிருக்கிறாள் என்ற நிலைகளை எடுத்துக்காட்டுவது, அத்துடன் ஆணின் அதிகாரத் தன்மைகளை வரலாற்றியல் வழிக் கொணர்வது, அவ்வதிகாரத்தின் விளைவாகப் பெண்கள் மீது அடக்குமுறைகளும், ஒடுக்குமுறைகளும் தொடர்வதை ஆராய்வதும் பெண்ணியத்தின் நோக்கங்கள்" என்று செ.சாரதாம்பாள் குறிப்பிடுகின்றார்.

இப்பெண்ணிய நோக்கங்களோடு நன்மாறன் கோட்டைக் கதையில் பெண்ணிய மாந்தர்களின் நிலைகளை இமையம் எடுத்துரைக்கும் பாங்கு குறிப்பிடற்குரியது.

**<u>நன்மாறன் கோட்டைக் கதை</u>**

மாடுகளுக்கான பந்தயத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த முத்துராமன் என்பவரின் மாடு வெற்றி பெற்றது. இதைத் தாங்கிக் கொள்ள இயலாமல் மேலாதிக்கச் சாதியினர் முத்துராமனையும், அவனது மாட்டையும் சுளுக்கியால் குத்திக் கொன்றுவிடுகின்றனர். மாடு முட்டி இறந்துவிட்டதாக முத்துராமனின் மனைவி செல்வமணியிடமே கையெழுத்து வாங்கும் குரூரத்தை பேசுகிற வலுவான பொருண்மை கொண்ட கதை இது.

"யாருக்கும் தெரியாமல் போலீசுக்குப் போகலாமா என்ற எண்ணம் செல்வமணிக்கு உண்டானது. போலீசுக்குப் போகலாம். கேஸ் கொடுக்கலாம். 'சாட்சி சொல்ல யார் வருவார்கள்?' என்ற கேள்வி எழுந்தது. சாமி ஊர்வலத்தின் போது கும்பிட்டதற்காக நான்கு வருஷத்துக்கு முன்பு ஜெயலட்சுமியினுடைய கண்களைப் பிடுங்கிய ஊர். தேர் வடத்தைத் தொட்டுவிட்டாள் என்று ஒன்பது வயதுப்பிள்ளை என்று கூடப் பார்க்காமல் இரண்டு

வருஷத்துக்கு முன்பு ரோஸியின் கையில் தீயை வைத்துக் கொளுத்திய ஊர். அப்படிப்பட்ட ஊரை எதிர்த்துக் கொண்டு போலீசுக்குப் போக முடியுமா? ஊரைப் பகைத்துக் கொண்டு போலீசுக்குப் போனதற்காக இரவில் வீட்டைக் கொளுத்தலாம். தனியாக மாட்டிக் கொண்டால் மானபங்கம் செய்யலாம்" என்றெல்லாம் யோசித்த செல்வமணி தன் மூன்று பிள்ளைகளாவது உயிரோடு வாழ வேண்டும் என்ற பயத்தினால் ஊரை விட்டுச் செல்ல முடிவு செய்வதாகக் கதை முடிகின்றது.

ஒருபெண் தன் மூன்று பிள்ளைகளோடு தனியே வாழ பயந்து சொந்த ஊரை விட்டுச் செல்லக் கூடிய அவலநிலையை இக்கதையில் காண முடிகின்றது. பெண்களின் சமூகப் பாதுகாப்பின்மையை இமையம் வலியுறுத்திச் செல்வது இங்கு குறிப்பிடற்குரியது.

**<u>தலைக்கடன்</u>**

கணவன் பாண்டிக்கும், வேறு ஒரு பெண்ணுக்கும் இருந்த தொடர்பை ஊரறியத் தட்டிக் கேட்கும் பெண்ணாக சீனியம்மா இக்கதையில் உலா வருகின்றாள். ஊர் மக்கள் அனைவரும் தன் கணவனுக்குத் துணையாக நின்ற போதும் காவல் நிலையம் சென்று சீனியம்மா புகார் கொடுக்கிறாள். பாண்டி சீனியம்மாவை பிரித்து விட்டுத் தன் பிள்ளையை மட்டும் தன்னோடு கூட்டிச் செல்ல நினைக்கின்றான். அப்போது பிள்ளையை அவனிடம் கொடுக்க மறுத்து ஊரறிய தன் கணவனின் ஆண்பிம்பத்தையும் குலைத்துப்போடும் பெண்ணாய்க் காட்சி அளிக்கின்றாள் சீனியம்மா.

**"காதல் செய்யும் மனைவியே சக்தி காண்பீர்**

**கடவுள் நிலை அவளாலே எய்த வேண்டும்"**

என்று பாரதியார் பெண்ணைப் பாடும் போது அவளைத் தெய்வ அம்சம் பொருந்தியவளாகக் காட்டுகின்றார். தெய்வத்திற்கு இணையாகச் சொல்லப்பட்ட பெண்ணின் நிலை குறித்து இமையம் இக்கதையில் சித்திரிக்கும் பாங்கு சிந்திக்கத்தக்கது.

சீனியம்மாவின் கணவன் பாண்டி, பிரேமா என்ற பெண்ணோடு இருந்த தொடர்பை அறிந்து அவள் வீட்டிற்குச் சென்று உண்மையை அறிகிறாள். வீட்டிற்கு வந்து துணிகளை எடுத்துக் கொண்டு தன் தாய் வீட்டிற்கு கிளம்பும்போது, "அங்க எப்பிடி வந்த? என்பதையே கேட்டுக் கேட்டு அடித்தான். அடிதாங்க முடியாமல் தெருவுக்கு ஓடி வந்தபோதும் விடவில்லை. மாட்டை அடிக்கிற சாட்டைக்குச்சியால் அடித்த போதுதான் சீனியம்மாவுக்குச் சிறுநீரும், மலமும் வந்துவிட்டது. அதன் பிறகும் பாண்டி அடிப்பதை நிறுத்தாததால்

தெருவில் ஓட ஆரம்பித்தாள்" என்று இமையம் குறிப்பிட்டுள்ள இவ்வரிகள் கொடுமைக்கார ஆண்வர்க்கத்தை எடுத்துக்காட்டுகின்றது.

சீனியம்மா தன்தாய் மறித்தும் மீறிக் கொண்டு மகளிர் காவல் நிலையத்தில் கணவன் மீது குற்றம் சாட்டி மனு கொடுத்தாள். சீனியம்மா மனு கொடுத்ததை அறிந்த ஊரில் உள்ளவர்கள் சீனியம்மாவின் செயலைக் கண்டித்தனர். ஆண் தவறிழைக்கும் போது இச்சமூகம் ஆணிற்கே சார்பாக இருக்கிறது என்பதை "ஒரு ஆள் கூடப் பாண்டி செய்தது தவறு என்று சொல்லவில்லை. தெருவில் போட்டு ஏன் அடித்தாய் என்று கேட்கவில்லை." என்று இமையம் குறிப்பிடுவது சமூகத்தில் பெண்கள் நிலையை அறியலாம்.

கணவன் மீது கொண்ட வெறுப்பின் காரணமாகத் தான் அவுசாரி என்ற பட்டத்துடன் வாழ்ந்தாலும் கணவனின் ஆண் பிம்பத்தைக் குலைத்துப் பழிவாங்கும் பெண்ணாய் சீனியம்மா காட்சியளிக்கிறாள். சமூகத்தில் பேசுவதற்கும், பகிர்ந்து கொள்வதற்கும் கூசும் அவலங்களைச் சாதாரணமாகத் தனக்கே உரிய நடையில் இமையம் எடுத்துரைப்பது இங்கு நோக்கத்தக்கது.

**சாந்தா**

கட்டிட வேலை பார்க்கும் சித்தாள் சாந்தாவைத் தன் ஆசை நாயகியாக்கிக் கொள்ள விரும்பும் செல்வக்குமாருக்கு சாந்தா சொல்லும் முடிவுதான் இக்கதை.

செல்வக்குமார் வீடு கட்டிட வேலை ஆரம்பித்த நாள் முதல் சாந்தா அவன் வீட்டிற்குச் சித்தாள் வேலைக்குச் செல்கின்றாள். வேலை ஆரம்பித்த இரண்டு வாரங்களில் சாந்தாவின் செல்போன் எண்ணை செல்வக்குமார் கேட்க, தர மறுத்து விடுகின்றாள். திடீரென்று ஒருநாள் கட்டிட வேலையின் போது சாந்தாவின் தலையில் பாண்டு விழுந்து அடிபட்டது. அப்போது செல்வக்குமார் ஊரில் இல்லை. செய்தியறிந்த அவன் அலைபேசியில் டிரைவரிடம் கூப்பிட்டு மருத்துவ செலவுக்குப் பணம் கொடுக்கச் சொல்கின்றான். ஊரிலிருந்து திரும்பியதும் சாந்தாவைக் காண அவள் வீட்டிற்குச் செல்கின்றான். அவன் எந்த நோக்கத்தோடு தன்னைக் காண வந்திருக்கிறான் என்பதை அவன் பேச்சால் சாந்தா உணர்ந்தாள். செல்வக்குமாரிடம், "காலயில ஆறு மணிக்கு ஊட்ட வுட்டுக் கிளம்பினா, திரும்பி ஊட்டுக்கு வர ராத்திரி எட்டு ஒம்போது மணி ஆயிடும், ரோட்டுக்கு நடந்து போவயில, பஸ்ஸுலபோவயில ஆள் கூப்புட வர்ற எடத்துல நிக்கயில, வேல செய்யுற எடத்தில, திரும்பி ஊட்டுக்கு வந்து சேருறதுக்குள்ளார ஒரு நாளைக்கி எத்தன ஆம்பள

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

என்னெ பாப்பாங்க? எல்லார் மனசுமா நல்லா இருக்கும்? எத்தன பேரு ஆசப்படுவாங்க? ஆசப்பட்டுட்டாங்களேன்னு அத்தன பேர்கூடயும் நான் போவ முடியுமா சார்? அப்பிடின்னா, ஒருநாளக்கி நான் எத்தன பேர்கூட போவனும்?" என்று சாந்தா முகத்தில் அறைந்தது போல் கூறுகின்றாள்.

செல்வக்குமார் சாந்தாவிடம் செலவுக்காகப் பணக்கட்டை நீட்டியும் அதை வாங்க மறுத்து விடுகின்றாள். பணத்திற்காகத் தன் மானத்தை விற்க அவள் மனம் இடம் தரவில்லை. ஏழ்மை நிலையிலும் தன்மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் மிகச்சிறந்த படைப்பு சாந்தா.

பெண்களைப் போகப் பொருளாக்கி ஆதாயந்தேட விரும்பும் ஆண்வர்க்கத்திற்குச் சாட்டையடியாக சாந்தா சித்தரிக்கப்பட்டுள்ளாள்.

**ஆலடிபஸ்**

டவுன் பஸ்ஸில் தெரிந்த பெண்ணிற்காக இடம் போட்டுவிட்டு அந்த இடத்துக்காகத் தன்னிடம் சண்டைக்கு வருவோரையெல்லாம் சமாளிக்கும் ஒரு பெண்ணின் கதை தான் „ஆலடிபஸ்".

பிரியங்கா ஜெராக்ஸ் கடை ஒன்றில் பணிபுரியும் பெண். தினமும் இரவு ஒன்பது மணிக்குத் தான் வீடு திரும்புவாள். அன்று பெண்ணிற்கே உரிய மாதவிடாய்ப் பிரச்சினை காரணமாக முதலாளியிடம் மதியத்திற்கு மேல் விடுப்பு கேட்டுக் கொண்டு கிளம்பினாள். பஸ்ஸில் வேறு பெண்ணுக்கு இடம் போட்டுவிட்டு, அவள் வருவதற்குள் பல பிரச்சினைகளைச் சமாளிக்கின்றாள். பஸ்ஸில் பெண்கள் பலரும் போட்டு வைத்த இடத்திற்காக சண்டைக்கு வருகின்றனர். அது மட்டுமன்றி போதையில் இருந்த ஒருவன் பிரியங்காவின் தோள் மீது கை வைத்து அழுத்துகின்றான். அப்போது, "ஓலகத்திலேயே நீதான் ஆம்பளயா? நானும் ரொம்ப நேரமா பாத்துக்கிட்டு வர்றன். கையக் கொண்டாந்து எங்க வைக்கற? பஸ்ஸுல வந்துதான் நீ ஆம்பளங்கிறத காட்டுவியா? என்று ஒன் வீரத்த காட்டுற எடத்துல போய்க் காட்டு" என்று துணிச்சலோடு சத்தம் எழுப்பினாள். இவளுடன் இடச் சண்டைக்கு வந்த வடக்கிருப்புக்காரி என்ற பெண்ணும் பிரியங்காவிற்காக அந்த ஆணிடம் சண்டைக்குப் பாய்ந்தாள். எந்த பிரச்சினையையும் கண்டு கொள்ளாமல் நடத்துனர் டிக்கெட் கொடுக்க பஸ் சென்று கொண்டிருந்தது என்று ஆசிரியர் கதையை முடிக்கின்றார்.

வேலைக்குச் செல்லும் பெண்கள் சுதந்திரமாக பேருந்தில் கூட பயணம் செய்ய இயலாத நிலை குறித்து இக்கதை பேசுகின்றது.

**"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**
**திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**
**செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்"**

என்று மகாகவியின் வரிகளுக்கு இணங்க புதுமைப் பெண்ணாய், எல்லோரையும் சமாளிக்கும் சாமர்த்தியமும், துணிச்சலும் நிறைந்தவளாய் பிரியங்கா படைக்கப்பட்டிருக்கிறாள் என்பது நோக்கத்தக்கது. இன்றைய சூழலில் வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கும் துணிச்சல் அவசியம் என்பதை „ஆலடி பஸ்" எனும் கதை உணர்த்துகிறது.

**<u>முடிவுகள்</u>**

ஓர் எளிய நிகழ்ச்சியைச் சிறுகதையாக்கி தமிழ் உலகிற்கு எடுத்தியம்பும் இமையத்தின் தனிநடை சிறப்பிற்குரியது.

இவருடைய கதைகள் கண்முன் காட்சிப்படுத்தக் கூடியவை.

இவர் படைத்திருக்கும் பெண்கள் அசாதாரணப் பண்புகளைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

பெண்களின் பிரச்சினைகளை சரிபாதி மானிடத்தின் பிரச்சினையாக இமையம் காண்பது நோக்கத்தக்கது.

பாலியல் உறவுகளின் உளவியல் சிக்கல்களையும் இவர் கதைகளில் காணமுடிகின்றது.

சமுதாயம் பெண்கள் மீது திணித்துள்ள பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்ற பாத்திரங்களாக செல்வமணி, சீனியம்மா, சாந்தா, பிரியங்கா உலா வருகின்றனர்.

1. கணவனைக் கொன்றவர்களோடு சொந்த ஊரில் வாழ முடியாமல் ஊரை விட்டுச் செல்லும் செல்வமணி.

2. கணவனுக்கும் வேறு பெண்ணுக்கும் இருந்த தொடர்பின் காரணமாகக் கணவனின் ஆண்பிம்பத்தைக் குலைத்து கணவனைப் பிரித்து விட்டு தனியே நிற்கும் சீனியம்மா.

3. கட்டிட வேலைக்குச் சென்ற சித்தாளைத் தன் ஆசை நாயகியாக்கிக் கொள்ள விரும்பும் செல்வக்குமாருக்குச் சாட்டையடி கொடுத்த சாந்தா.

4. மாதவிடாயக் காலத்தில் வேலைக்குச் செல்லும் பெண் பஸ்ஸில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைச் சமாளிக்கும் பிரியங்கா.

இவர்கள் அனைவரும் துயரத்தின் வெவ்வேறு முகங்கள். ஒவ்வொரு நாளும் போராடித் தான் வாழ வேண்டும் என்ற நிபந்தனைக்கு உரியவர்கள். ஆனால், அப்பெண்கள் வாழ்வின் அடுத்த நகர்வு என்ன என்பதை இமையம் அப்படியே விட்டுச் சென்று விடுகின்றார்.

## துணைநூற்பட்டியல்

[1] ஆனந்தவல்லி மகாதேவன் , ஜெயகோதைப் பிள்ளை , "பெண்ணியம்", பக்.32, முதல் பதிப்பு , 2004, அன்னை தெரசா மகளீர் பல்கலைக்கழகம் , கொடைக்கானல்.

[2] செ. சாரதாம்பாள் , " பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும் , பக். 6-7, முதல் பதிப்பு , 2005, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் , சென்னை.

[3] இமையம், "நன்மாறன் கோட்டைக் கதை", பக். 28-29, முதல் பதிப்பு, 2019, க்ரியா, சென்னை.

[4] பாரதியார், "பாரதியார் கவிதைகள்", பக்.262, முதல் பதிப்பு, 2008, ராமையா பதிப்பகம் , சென்னை.

[5] இமையம், " நன்மாறன் கோட்டைக் கதை" பக். 118-119, முதல் பதிப்பு, 2019,க்ரியா, சென்னை.

[6] இமையம், "நன்மாறன் கோட்டைக் கதை", பக். 124, முதல் பதிப்பு, 2019, க்ரியா, சென்னை.

[7] இமையம், " நன்மாறன் கோட்டைக் கதை", பக். 150, முதல் பதிப்பு, 2019, க்ரியா, சென்னை.

[8] இமையம், "நன்மாறன் கோட்டைக் கதை", பக். 177, முதல் பதிப்பு, 2019, க்ரியா, சென்னை.

[9] பாரதியார், "பாரதியார் கவிதைகள்", பக். 199, முதல் பதிப்பு 2008, ராமையா பதிப்பகம் , சென்னை.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2021, IRJTSR